30—

மருது பாண்டியர்களுக்கு சிலை

***7489—திரு. பெரி. செந்தில்நாதன்:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை நகரில் மாமன்னர்கள் மருது பாண்டியர்களுக்கு சிலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிவகங்கையில் மருது சகோதரர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்கப்படுமா என்று வினவியிருக்கிறார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு ஐயா கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது அறிவிக்கப்பட்டு, சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் மருது சகோதரர்களுக்கு 8 அடி உயரத்தில் இரு சிலைகள் அமைக்கப்பட்டு, மணிமண்டபமும் அமைக்கப்பட்டு, நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் 24 ஆம் நாளன்று மருது சகோதரர்களுக்கு அரசின் சார்பில் மரியாதை செய்யப்பட்டு வருகிறது. எனவே, சிவகங்கையில் அந்தச் சிலையை அமைக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன் அவர்கள்.*

முற்பகல் 10–55

திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1857–ல் நடைபெற்ற முதல் இந்திய சுதந்திரப் போராட்டமான சிப்பாய்க் கலகத்திற்கு முன்பாகவே ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை

2022 மார்ச் 21]

எதிர்த்துப் போரிட்ட, தென்னிந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்டத்திற்கு வித்திட்ட மாமன்னர்கள் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த மருதுபாண்டியர்களுக்கு, நினைவிடமும், திருவுருவச் சிலையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால், மாமன்னர்களைத் தூக்கிலிட்ட திருப்பத்தூரில் நிறுவப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) மருதுபாண்டியர்கள் வாழ்ந்த சிவகங்கை நகரில் மாமன்னர்கள் மருதுபாண்டியர்கள் திருவுருவச் சிலை வைப்பதற்கு மாண்புமிகு முன்னாள் முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அம்மாவின் அரசு அனுமதி வழங்கி, அரசாணை வெளியிட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அரசாணையின்படி, சிவகங்கை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான விடுதலைப் போராட்ட தியாகிகள் மாமன்னர்கள் மருதுபாண்டியர்களுக்கு சிவகங்கையில் திருவுருவச் சிலை அமைத்துத் தர வேண்டுமென தமிழக அரசிடம் தங்கள் வாயிலாகக் கோரிக்கை வைக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசின் சார்பில் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், மொழிக் காவலர்களுக்கும், நினைவு மண்டபங்களும், மணிமண்டபங்களும், திருவுருவச் சிலைகளும் அமைத்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. அதேநேரத்திலே, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள் மூன்றாவது முறையாகத் தமிழகத்திலே முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலகட்டத்திலேதான், நினைவில் வாழும் அய்யா திரு. எஸ்.எஸ். தென்னரசு அவர்கள் அந்தப் பகுதியில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியபோது அவருடைய கோரிக்கையை ஏற்று, மருது சகோதரர்களுக்கு திருப்பத்தூரிலே சிலை அமைக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. கடந்த நிதியாண்டில் செய்தித் துறையினுடைய மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இங்கு சென்னையிலே, காந்தி மண்டபத்தில் மருது சகோதரர்களுக்கு திருவுருவச் சிலை அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே ஏற்கெனவே அறிவிப்பும் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, தேவைப்படின், மாண்புமிகு முதலமைச்சர்*

அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதுகுறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன் அவர்கள்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் இடம் ஒதுக்கி, திருவுருவச் சிலை அமைப்பதற்கு வெளியிடப்பட்ட அரசாணை ஆவணமாக இருக்கிறது. அதையும் செய்து தர வேண்டுமென்று மீண்டும் அரசை வலியுறுத்துகிறேன். சிவகங்கை மாவட்டத்தினுடைய சிறப்புக்குரியவர்களான விடுதலைப் போராட்ட தியாகி, வாளுக்கு வேலி அம்பலம் அவர்களுக்கும், வீரப் பெண் குயிலி அவர்களுக்கும், "யாதும் ஊரே; யாவரும் கேளிர்; தீதும் நன்றும் பிறர்தர வாரா;" என்ற புறநானூற்றுப் பாடல் தந்த கணியன் பூங்குன்றனார் அவர்களுக்கும், ஒக்கூர் மாசாத்தியார் அவர்களுக்கும், கம்பராமாயணத்தைத் தந்த கம்பர் இறுதியாக வாழ்ந்து மறைந்த நாட்டரசங்கோட்டையில் கம்பருக்கும் மணிமண்டபம் அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்துகளை நிச்சயமாக பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உறுதியாக நடவடிக்கை எடுப்போம். அதேநேரத்திலே, இப்போது மணிமண்டபம் அமைப்பதற்குப் பதிலாக, அரங்கம் அமைத்து, நம்முடைய விடுதலைப் போராட்ட வீரர்களாக இருந்தாலும்சரி, மொழிக் காவலர்களாக இருந்தாலும்சரி, தமிழ்க் காவலர்களாக இருந்தாலும்சரி, தமிழ்ப் புலவர்களாக இருந்தாலும்சரி, தமிழறிஞர்களாக இருந்தாலும்சரி, அரங்கம் ஒன்றை அமைத்து, பொது மக்களுடைய பயன்பாட்டிற்கு, அன்றாடம் பயன்படுகின்ற வகையிலே, அதை அமைப்பதென்று கொள்கை முடிவாக எடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்று சொன்னால், மணிமண்டபம் என்று அமைக்கப்பட்டால், வருடத்திற்கொருமுறை, பிறந்த நாள்*

2022 மார்ச் 21]

விழாவிற்கு மாலை அணிவிக்கிறபோது மட்டும்தான் திறக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படுவதால், அது சிதிலமடைந்துவிடுகிறது. எனவே, அரங்கம் அமைப்பது குறித்து எதிர்காலத்திலே பரிசீலிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைகளை நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அய்யா கலைஞர் அவர்கள் இருந்தபொழுதுதான் நம்முடைய விடுதலைப் போராட்ட வீரர்களானாலும்சரி, தமிழ்க் காவலர்களாக இருந்தாலும்சரி, நம்முடைய மகத்தான பெரியவர்களுக்கெல்லாம் திருவுருவச் சிலை அமைத்தும், அரங்கம் அமைத்தும், மரியாதை செலுத்தப்பட்டதிலே முன்னணி மாநிலமாகத் தமிழகம் எப்போதும் விளங்கியது என்பதைக் கடந்த கால வரலாறு தெரிவித்திருக்கிறது. அதேபோல, அவருடைய வழியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அதற்கென தாராளமாக நிதியை ஒதுக்கி தேவைப்படுகிற இடத்திலே, தேவையான வகையிலே அதையெல்லாம் செய்து கொடுக்க உத்தரவிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில், படிப்படியாக நிதிநிலைக்கேற்ப நிச்சயமாக அதுகுறித்துப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

4. அறிவிப்பு

மாநில நூலகக் குழு மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்திற்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டப்படியாக அமைக்கப்பட்ட மாநில நூலகக் குழு மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியத்திற்கு தலா 3 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. மேற்குறிப்பிட்ட அமைப்புகளில், மாநில நூலகக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின்